24.08.2017

தினமலர்

# 'பட்டர்' பீன்ஸ் தரும் 'பெட்டர்' வருவாய்சாதிக்கும் பட்டதாரி இளைஞர்:



கொடைக்கானல் அருகே மலைக் கிராமமான தாண்டிக்குடியில் பட்டர் பீன்ஸ் பயிரிட்டு அதிக மகசூல் ஈட்டி வருகிறார் பட்டதாரி இளைஞர் திலீப் மலைக் காய்கறி . வகையில் முதலிடத்தில் உள்ளதுபட்டர் பீன்ஸ்இதில் அதிகளவு புரோட்டீன் ., நார்ச்சத்து, வைட்டமின், மினரல் உள்ளதுசர்க்கரை நோயாளிகள் ., மாமிசத்தை உட்கொள்ளாதவர்கள் அதிகளவு பட்டர் பீன்ஸ் உண்கின்றனர் பட்டர் பீன்ஸ்க்கு . விதைத்த .எப்போது வேண்டுமானாலும் பயிரிடலாம் .தனியாக சீசன் கிடையாது30 நாட்களில் கொடி உருவாகி விடும் .90 நாட்களில் காய்கள் கிடைக்கும் .

தாண்டிக்குடியில் இருந்து பட்டர் பீன்ஸ், அதிகளவு சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது திலீப்.தாண்டிக்குடியை சேர்ந்தவர் ஜி. .டயுள்யூ.எஸ்.எம், படித்துள்ளார்.

திலீப் கூறியதாவது தனியார் நிறுவனத்தில் வேலை பார்ப்பதை விட சொந்தமாக : பட்டர் .விவசாயம் செய்யலாம் என நினைத்து விவசாயத்தில் களம் இறங்கினேன் இதில் ஒரு கிலோ விதை விதைத்தால் .பீன்சை ஒன்றரை ஏக்கரில் பயிரிட்டுள்ளேன்90 நாட்களில் 100 கிலோ பட்டர் பீன்ஸ் கிடைக்கும்காய்ப்புக்கு வந்த .◌ 4 மாதங்கள் வரை காய்கள் பறிக்கலாம்ஏக்கருக்கு பூச்சி மருந்து ., களை எடுப்பு, பராமரிப்பு, நீர் பாய்ச்சுவது என 50 ஆயிரம் ரூபாய் முதல் 60 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும் . ஏக்கருக்கு ஒன்றரை டன் முதல்2 டன் வரை பட்டர் பீன்ஸ் கிடைக்கும் ஒரு கிலோ .

100 ரூபாய்க்கு விற்கிறது .1.50 லட்சம் ரூபாய் முதல் 2 லட்சம் ரூபாய் வரை வருவாய் பெறலாம்.சீசனுக்கு ஏற்ப விலை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது .
மழை இல்லாததால் வேர்ப்புழு, வெள்ளைப் பூச்சி தாக்குதல் உள்ளது இதற்கு .
இயற்கை உரங்களையும், மாட்டு சாணத்தையும் கரைத்து தெளித்தால் போதுமானது .
இயற்கையான மழை இருந்தால், காய்கள் அதிகளவு பிடிக்கும் விவசாயத்திலும் .
நல்ல லாபம் .சாதனை புரியலாம் என்பதை நினைக்கும் போது பெருமையாக உள்ளது தருவதால், வேளாண் சாகுபடியில் முழுமூச்சாக இறங்கிவிட்டேன், என்றார் .
தொடர்புக்கு97860- 22852.

- எஸ்அரியநாயகம்., திண்டுக்கல்.

## மூலிகையால் மாளிகை கட்டுங்கள்

மூலிகை செடிகள் வளர்ப்பு வருவாய் தரும் முக்கிய விவசாய தொழிலாக மாறி வருகிறதுமூலிகைகள் நமது பாரம்பரிய சொத்து .; அமுதசுரபி என்பதை உணரும் காலம் வந்து விட்டது அடுத்த தலைமுறைக்கு மூலிகையின் மாண்பு குறித்து எடுத்து . சொல ்லும் காலகட்டம் வந்து விட்டது மூலிகை மீது அக்கறை கொண்ட . சென்னையை சேர்ந்த அக்ரி ெஹல்த் புராடெக்ட் நிர்வாக இயக்குனர் சுபஸ்ரீவிஜய் அதன் மகத்துவம் குறித்து .தனது வீட்டை மூலிகையால் மாளிகையாக மாற்றியுள்ளார் மூலிகை மருத்துவ கண்காட்சிகளில் விளக்கம் அளித்து வருகிற ார் வீட்டு மாடிகளில் . மூலிகை தோட்டம் அமைக்க விரும்வோருக்கு தேவையான உபகரணம், ஆலோசனையை வழங்கி வருகிறார் தமிழகத்தில் :சுபஸ்ரீவிஜய் கூறியதாவது .
மட்டுமே1,500 மூலிகை ரகங்கள் உள்ளன என் வீட்டில் .250 வகை மூலிகைகளை வளர்க்கிறேன்இதன் அவசியம் உணர்த்த பள்ளி ., கல்லுாரிகளில் மூலிகை தோட்டம் அமைத்து
தருகிறேன்என் தோட்டத்தில் மூட்டுவலி ., எலும்பு தேய்மானத்தை தடுக்கும் எலும்பொட்டி மூலிகை, வாதம் போக்கும் செங்கொடிவேலி, நீர்பிரம்பி, கல்லடைப்பு, கிட்னி பிரச்னை வராமல் தடுக்கும் 'பூனை மீசை' மூலிகை, வாய் துர்நாற்றம் போக்கும் சர்வசுகந்தி, சித்த மருத்துவர்கள் தைலம் தயாரிக்க பயன்படும் செங்காந்தள்மலர், கேன்சர் வராமல் தடுக்கும் முள்ளுகீரா, காற்றில் பரவும் நோய்களை தடுக்கும் தும்பை, சிறு கண் பீழை (கூரைப்பூ), ஆவரம்பூ, மா, வேப்பிலை மூலிகைகள், எலும்மிச்சம்புல் மூலிகை இலையை டீ இப்புல்லை சாறாக எடுத்து .யில் போட்டு குடிக்கலாம் - வீட்டிற்குள் தெளித்தால் ஈ, கொசுக்கள் வராது இது போன்று ஏராளமான மூலிகை .

இதற்காகவே மூலிகையால் .செடிகள் மூலம் நம் வாழ்வு பாதுகாக்கப்படுகிறது அந்த மூலிகை காற்று உங்களை தழுவும் போது ஆரோக் .மாளிகை கட்டுங்கள்கிய சுகமளிக்கும்இது மாத்திரை ., நோய்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும், என்றார்.

தொடர்புக்கு 96771 01627.

- என்வெங்கடேசன்., மதுரை.

## மாடித்தோட்டத்தின் மாண்பு

வீடுகள் தோறும் மாடித்தோட்டம் அமைப்பது குடும்ப பெண்களுக்கு லாபகரமான பொழுது போக்கு அம்சம் .சமையலுக்கு அன்றாடம் தேவைப்படும் காய்கறிகள், கீரை வகைகளை சத்தானதாக, பூச்சிக்கொல்லி மருந்து இல்லாமல், இயற்கையான வகையில் விளைவிக்கலாம்மக்கிய இலைத்துகள்கள் :தேவையான பொருட்கள்., தென்னை நார்கழிவுகள், மரத்துாள், நெல் உமி, இதனுடன் ஒரு பங்கு மணல் கலக்க வேண்டும் .இதனால் நல்ல காற்றோட்டம், வடிகால் வசதி செடிக்கு கிடைக்கும் . ஊடகம் .இதனுடன் ஒரு பங்கு மண்புழு உரம் சேர்த்து பயிர் சாகுபடி செய்யலாம் மண் ) தேர்வு செய்யக்கூடிய ஊடகமானது :தேர்வு, மணல், தென்னை நார் கழிவு, இயற்கை உரம் அடங்கிய தொகுப்பு .எளிதில் கிடைக்க வேண்டும் (அதிக தண்ணீரை பிடித்துக் கொள்ளும் திறனுடையதாகவும், காற்றோட்டமாகவும் இருக்க வேண்டும் . அதிகமான தண்ணீர் இருப்பின், எளிதில் வடியும் திறன் உடையதாக இருக்க வேண்டும் தேர்வு செய்யும் ஊடகத்தில் பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்குதல் . சிறிய .இல்லாமல் இருக்க வேண்டும் நுண்ணுயிர்கள் மற்றும் நுாற்புழுக்கள் போன்றவை ஊடகத்தில் இருக்கக்கூடாது பயிருக்கு தீமை விளைவிக்கக் கூடிய . பூச்சிகளின் முட்டைகள், புழுக்கள் இல்லாமல் பார்த்து கொள்ள வேண்டும் மண்ணிற்கு . தேர்வு செய்த ஊடகத்தை ஒரு தொட்டி அல்லது பாலிதீன் பையில் :மாற்று தேவையானநீளம், அகலம் மற்றும் ஆழத்தில் .அமைக்க வேண்டும் (பயிருக்கு ஏற்ப) உதாரணமாக, குறைந்த வேர் ஆழம் உடைய பயிர்களுக்கு, ஆழம் குறைவாகவும், அதிகமான வேர் உடைய பயிர்களுக்கு, அதிக ஆழத்திலும் தொட்டியினை அமைக்க வேண்டும்நிரப்பும் பொழுது நன்கு சுத்தம் செய்த ஊடகங்களை நிர .ப்ப வேண்டும் . அதாவது .செய்ய வேண்டும் (ஸ்டேர்லைஸ்) பின் நுண்ணுயிர்கள் அழித்தல் முறையை 10 மில்லி லிட்டர் பார்மலின் கரைசலை ஒரு லிட்டர் தண்ணீரில் கலக்கி ஒரு சதுர மீட்டருக்கு 5 லிட்டர் என்ற விகிதத்தில் நன்றாக நனைக்க வேண்டும் சொட்டுநீர் .

ஊடகம் நன்றாக நன :பாசனம்ை◌ந்த பின் 100 மைக்ரான் தடிமனுள்ள கருப்பு நிற பாலிதீன் தாள் கொண்டு நன்கு மூட வேண்டும் இதனை .2 - 3 நாட்களுக்கு அப்படியே வைக்க வேண்டும் பின் கருப்புத்தாளை எடுத்து விட்டு நன்றாக நீரை வெளியே . இவ்வாறு செய்வதனால் ஊடகத்திலுள்ள .வடியும் வரை பாசனம் செய்ய வேண்டும் பாக்டீரியா மற்றும் பூஞ்சாணங்கள் அழிக்கப்படுகின்றன இந்த ஊடகத்தை எந்த பயிர் . சாகுபடி செய்கிறோமோ, அந்த பயிருக்கு பரிந்துரைக்கப்பட்ட உரத்தை சொட்டுநீர் பாசனம் கொண்டு உரப்பாசனம் செய்யலாம்.

தொடர்புக்கு: 94865 85997

- டியுவராஜ்.

வேளாண் பொறியாளர், உடுமலை.

தினமணி

## மஞ்சள் சாகுபடியில் மேம்பட்ட தொழில்நுட்பங்கள்



பெரம்பலூர்: மருத்துவ குணங்கள் நிறைந்த மஞ்சள் தென்னிந்திய சமையலில் இன்றியமையாத இடத்தைப் பிடித்துள்ளது. பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளால் ஏற்படும் பலவகையான நோய்களுக்கு எதிர்பொருளாக மஞ்சள் செயலாற்றுகிறது. இதன் காரணமாக , பலவகையான அழகுசாதன பொருள்கள் தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் , துணிகளுக்கு சாயமேற்றுவதிலும் மஞ்சள் பயன்படுத்தப்படுவதால் சந்தையில் இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது.

**ரகங்கள்:** கோ- 1, கோ- 2, பி.எஸ்.ஆர் 1, பி.எஸ்.ஆர் 2, ஈரோடு உள்ளூர் ரகம் , சேலம் உள்ளூர் ரகம் ஆகியவை தமிழகத்தில் சாகுபடி செய்ய உகந்த ரகங்கள்.

பருவம்: கடல் மட்டத்திலிருந்து 1,500 மீட்டர் உயரம் வரையிலும் , 20- 30 செல்சியஸ் வெப்ப நிலையும், ஆண்டு மழையளவு 1,500 மி.மீ வரையுள்ள வெப்ப மண்டல மற்றும் மித வெப்ப மண்டல பகுதிகளில் மஞ்சள் சாகுபடி செய்யலாம். ஏப்ரல் மாத இறுதியிலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை மஞ்சள் நடவு செய்யலாம். எனினும் , ஜூன் மாதத்தில் நடவு மேற்கொண்டால் அதிக மகசூல் பெறமுடியும்.

மண்: நல்ல வடிகால் வசதிகொண்ட அங்ககச் சத்து நிறைந்த இரும்பொறை மண் மிகவும் ஏற்றது. பொல பொலப்புத் தன்மை வாய்ந்த செம்மண் , வண்டல் மண் மற்றும் களிமண் நிலங்களிலும் வளரும் தன்மைகொண்டது. அமில காரநிலை 6- 7 இருக்கும் நிலங்களில் பயிரின் வளர்ச்சி மற்றும் மகசூல் நன்றாக இருக்கும். அதிகமாக நீர் தேங்கும் நிலங்களிலும் , காரத்தன்மை வாய்ந்த நிலங்களிலும் பயிர் வெகுவான பாதிப்பிற்குள்ளாகும். கரடு முரடான மற்றும் கற்கள் நிறைந்த நிலங்களில் கிழங்கின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

**மஞ்சள் கிழங்கு நேர்த்தி:** தரமான மஞ்சள் கிழங்கைத் தேர்வுசெய்து , அவற்றை 1 லிட்டர் நீருக்கு கார்பெண்டாசிம் பூஞ்சாணக்கொல்லி 2 கிராம் மற்றும் மோனோகுரோட்டோபாஸ் பூச்சிக்கொல்லி 1.5 மில்லி என்ற அளவில் கலந்த கரைசலில் 20 நிமிடங்கள் நனைத்து வைக்கவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் கிழங்கு அழுகல் நோய் ஏற்படுத்தக் கூடிய பூஞ்சை மற்றும் செதில் பூச்சி தாக்குதலிலிருந்து பயிரை பாதுகாக்க முடியும்.

**குழித்தட்டு நாற்று உற்பத்தி:** காய்கறி மற்றும் கரும்பு பயிர்களைப் போல மஞ்சள் கிழங்கையும் குழித்தட்டுகளைப் பயன்படுத்தி நாற்று உற்பத்தி செய்து நடவு செய்யலாம். இதற்கு நேர்த்தி செய்யப்பட்ட கிழங்குகளை சிறு , சிறு துண்டுகளாக நறுக்க வேண்டும். ஒவ்வொரு துண்டும் 2 வளையங்கள் ஒரு கணுவைக் கொண்டிருக்குமாறு நறுக்க வேண்டும். இவ்வாறு நறுக்கப்படும் மஞ்சள் துண்டுகளின் எடை தோராயமாக 5 கிராம் என்ற அளவில் இருக்கும். 50 குழிகள் கொண்ட குழித்தட்டுகளை மஞ்சள் நாற்று உற்பத்திசெய்ய பயன்படுத்தலாம். 1 ஏக்கருக்கு தேவையான மஞ்சள் நாற்றுகள் உற்பத்தி செய்ய சுமார் 600 குழித்தட்டுகள் தேவைப்படும். மட்கிய தென்னை நாருடன் டிரைக்கோடெர்மாவிரிடி மற்றும் சூடோமோனாஸ் புரசன்ஸ் உயிரிகட்டுப்பாட்டு பொருள்களை ஏக்கருக்கு 1 கிலோ என்ற அளவில் கலந்து குழித்தட்டுகளில் உள்ள குழிகளில் பாதி அளவு நிரப்பி

நறுக்கபபட்ட மஞ்சள் துண்டுகளை கணுப்பகுதி மேல் நோக்கி இருக்குமாறு வைக்க வேண்டும். பிறகு , இதன்மீது தென்னை நார் கலவையை இட்டு நிரப்பி நிழலான இடத்தில் அடுக்கி வைக்க வேண்டும். பூவாளி கொண்டோ அல்லது கைத்தெளிப்பான் பயன்படுத்தியோ ஒரு நாளைக்கு ஒருமுறை நீர் தெளிக்க வேண்டும். அனைத்து குழிகளிலும் ஒரு இலை வெளிவந்த பிறகு ஹியூமிக் அமிலத்தை 1 லிட்டர் நீருக்கு 5 மி.லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். 4-வது நாளில் நாற்றைப் பிடுங்கி நடவு செய்யலாம். குழித்தட்டுகளை நீரில் கழுவி நிழலில் பாதுகாப்பாக வைத்திருந்தால் 3 ஆண்டுகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**குழித்தட்டு நாற்று முறையின் நன்மைகள்:** விதைக் கிழங்கு தேவை குறைவு ( 150 கிலோ, ஏக்கர்) நடவு வயலில் இருக்கும் காலம் குறைவதால் , கணிசமான அளவு நீர் மற்றும் மின்சாரம் சேமிக்கப்படுகிறது. ஒருமுறை களை எடுப்பதற்கான செலவு குறைகிறது. சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும்.

**நிலம் தயாரிப்பு மற்றும் நடவு:** உழவிற்கு முன்பாக நிலத்தில் ஏக்கருக்கு 4 டன் என்ற அளவில் தொழு உரம் இட்டு அல்லது ஆடு மாடுகள் கொண்டு கிடைகட்டி உழவு செய்யவேண்டும். மண் நன்கு பொடியாகும் வரை 3 முதல் 4 முறை ஒரு அடி ஆழம் வரை உழவுசெய்ய வேண்டும். 45 செ.மீ இடைவெளியில் பார்கள் அமைத்து நீர் பாய்ச்சி ஈரம் இருக்கும்போது , 30 செ.மீ இடைவெளியில் மஞ்சள் நாற்றுகளை நடவுசெய்ய வேண்டும். டிரைக்கொடெர்மா ஹார்சியானம் எனும் எதிர் உயிர் பூஞ்சாணத்தை, ஏக்கருக்கு 1 கிலோ என்றஅளவில் எருவுடன் கலந்து நிலத்தில் ஈரம் இருக்கும்போது தூவி விடலாம்.

**ஊடுபயிர்:** வெங்காயம், கத்திரி, மிளகாய் உள்ளிட்ட பயிர்களை மஞ்சளில் ஊடு பயிராகப் பயிரிடலாம். மஞ்சள் ஒரு நிழல் விரும்பும் பயிர். ஆனால் , அதிக நிழல் கிழங்கின் வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதால் , வரப்பு ஓரங்களில் ஆமணக்கு , அகத்தி, துவரை ஆகிய பயிர்களைப் பயிரிடலாம்.

**நீர் நிர்வாகம்** : மண்ணின் நீர்பிடிப்புத் தன்மை மற்றும் காலநிலையைப் பொருத்து 5 முதல் 9 நாள்களுக்கு ஒருமுறை நீர்ப் பாய்ச்சலாம். களிமண் பாங்கான நிலங்களுக்கு 15- 20 முறையும், மணற்பாங்கான நிலங்களுக்கு 30- 35 முறையும் நீர் பாய்ச்ச வேண்டும். கிழங்குகள் உருவாகும் சமயத்தில் நீர் பற்றாக்குறை ஏற்படாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**உர மேலாண்மை**: அடியுரமாக ஏக்கருக்கு 80 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 22 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட் , 12 கிலோ பொட்டாஷ் உரங்களை பார் அமைப்பதற்கு முன்பாக இட வேண்டும். பார் அமைத்த பிறகு 12 கிலோ பெரஸ்சல்பேட், 6 கிலோ துத்தநாக சல்பேட் உரங்களை பார்களின் மீது தூவி விட வேண்டும். அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை , ஏக்கருக்கு 4 கிலோ அளவில் நிலத்தில் ஈரம் இருக்கையில் தூவி விட வேண்டும். நடவு செய்த 30, 60, 90 மற்றும் 120-வது நாள்களில் ஏக்கருக்கு 22 கிலோ யூரியா மற்றும் 12 கிலோ பொட்டாஷ் உரங்களை இட வேண்டும்.

**நுண்ணூட்ட மேலாண்மை:** கேரள மாநிலம் கோழிக்கோட்டில் உள்ள இந்திய நறுமணப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் மஞ்சள் பயிருக்கென்று பிரத்யேமாக நுண்ணூட்டக் கலவையைத் தயார் செய்து வழங்கி வருகிறது. ஐ.ஐ.எஸ்.ஆர் பவர் மிக்ஸ் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த நுண்ணூட்டக் கலவையை, ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் அளவில் நடவு செய்த 60 மற்றும் 90-வது நாள்களில் இலைவழியாகத் தெளிப்பதன் மூலம் நுண்சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்து , 10 முதல் 15 சதவீத கூடுதல் மகசூல் பெறலாம். மேலும் , கிழங்குகளின் தரமும் நன்றாக இருக்கும்.

**கிழங்கு அழுகல் நோய்:** நன்கு வளர்ந்த நிலையில் , இலைகள் முழுவதும் காய்ந்துவிடுவதோடு, கிழங்குகள் அழுகி மட்கிவிடும். பாதிப்புக்குள்ளான செடிகளை கிழங்குடன் நிலத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டு , அந்த இடத்திலும் , அதைச் சுற்றியுள்ள செடிகளுக்கும் காப்பர் ஆக்சிகுளோரைடு மருந்தை 1 லிட்டர் நீருக்கு 2.5 கிராம் கலந்து ஊற்றலாம். டிரைக்கோடெர்மா ஹார்சியானம் எதிர் உயிர் பூஞ்சாணத்தை எருவுடன் கலந்து நிலத்தில் தூவலாம்.

**இலைப்புள்ளி நோய்** : இளம் இலைகளின் மேற்பரப்பில் பழுப்புநிற புள்ளிகள் தோன்றும். ஒழுங்கற்ற வடிவிலிருக்கும் இப்புள்ளிகளின் மையப்பகுதி வெள்ளை அல்லது சாம்பல் நிறத்தில் காணப்படும். நாளடைவில் இப்புள்ளிகள் ஒன்றிணைந்து பெரிய புள்ளிகளாக இலை முழுதும் பரவி இலை மடிந்துவிடும். இந்நோயைக் கட்டுப்படுத்த புரோபிகோனசோல் பூஞ்சாணக் கொல்லியை 1 லிட்டர் நீருக்கு 1 மில்லி அளவில் கலந்து தெளிக்கலாம்.

**இலைத் தீயல் நோய்:** நீள் உருளை வடிவ அல்லது செவ்வக வடிவ பழுப்புநிற புள்ளிகள் இலைகளின் இருபுறமும் காணப்படும். தாக்குதல் தீவிரமடையும் நிலையில் புள்ளிகள் அடர் பழுப்பு நிறத்திற்கு மாறி இலைகள் மஞ்சள் அல்லது பழுப்பு

நிறமாகிவிடும். முறையான தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் , செடியில் உள்ள அனைத்த கிளைகளுக்கும் பரவி செடியே மடிந்துவிடும். கிழங்கு உருவாவது வெகுவாக பாதிக்கப்படும். இதைக் கட்டுப்படுத்த பாதிப்பிற்குள்ளான இலைகளை செடியிலிருந்து அகற்றி தீயிட்டுக் கொளுத்த வேண்டும். பின்னர் , அசாஸிஸ்ட்ரோபின் மற்றும் டைபென்கோனசோல் கலவை பூஞ்சாணக் கொல்லியை 1 லிட்டர் நீருக்கு 1 மி.லி அளவில் கலந்துதெளிக்கலாம்.

**அறுவடை மற்றும் மகசூல்:** ரகத்தைப் பொறுத்து நடவு செய்த 7- 9 மாதங்களில் மஞ்சள் அறுவடைக்குத் தயாராகும். இச்சமயத்தில் தரைக்கு மேலுள்ள அனைத்து பாகமும் காய்ந்து மடிந்துவிடும். இவற்றை அரிவாள் கொண்டு அறுத்து அப்புறப்படுத்தி விட்டு தேவை எற்பட்டால் நீர்பாய்ச்சி உலரவிட்டு , பின்னர் மஞ்சள் கொத்தும் கருவி கொண்டு கிழங்கைத் தோண்டி எடுக்கலாம். டிராக்டரில் பொருத்தி இயங்கக்கூடிய மஞ்சள் அறுவடைக் கருவியைப் பயன்படுத்தியும் கிழங்குகளைத் தோண்டி எடுக்கலாம். தோண்டி எடுக்கப்பட்ட மஞ்சளிலிருந்து மண்ணை அப்புறப்படுத்தி விட்டு, பின்னர் பதப்படுத்தலாம். ஒரு ஏக்கருக்கு 8- 10 டன் பச்சை கிழங்கு மகசூலாகக் கிடைக்கும் என தெரிவித்தார் பெரம்பலூர் மாவட்டம் , வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ஜே. கதிரவன்.

## பணம் கொழிக்கும் பாசிப்பயறு!



திருநெல்வேலி: தண்ணீர்ப் பற்றாக்குறை நேரத்தில் குறைந்தஅளவு நீரைக் கொண்டு பாசிப்பயறு சாகுபடி செய்து நல்ல லாபம் ஈட்டலாம் என , வேளாண் துறை தெரிவித்துள்ளது.

**பாசிப்பயறு:** தண்ணீர்ப் பற்றாக்குறையால் நெல் , வாழைப் போன்றவற்றை சாகுபடி செய்ய முடியாதபோது பாசிப்பயறு சாகுபடி செய்யலாம். பயிர்களில் பாசிப்பயறு சாகுபடி காலம் மிகக் குறைவு. மேலும் பாசன நீர் குறைவாக கிடைத்தாலும் போதும். பாசிப்பயறு சாகுபடியில் இதர நன்மைகளும் உள்ளன. மற்ற பயிர்களைவிட ஏக்கருக்கு உரச்செலவு மிகவும் குறைவு. பயிர்ப் பாதுகாப்புக்கு அதிக செலவில்லை. பாசிப்பயறு சாகுபடியால் நிலம் நல்ல வளம் பெறும். 90 நாளில் லாபம் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

**சாகுபடி முன்** : ஓர் ஏக்கருக்கு 10 வண்டி தொழு உரமிட்டு நிலத்தை நன்கு உழ வேண்டும். அடி உரமாக ஏக்கருக்கு 60 கிலோ டை அம்மோனியம் பாஸ்பேட் உரமிடவேண்டும். நிலத்தில் நீர் பாய்ச்சி நல்ல ஈரப்பதத்தில் ஒரு சால் உழுது விதைக்க வேண்டும். ஏக்கருக்கு 8 கிலோ தரமான விதை தேவை. நீர் பாசனம் செய்ய நிலத்தில் சிறுசிறு பாத்திகள் ( 20 அடி, 10 அடி) அமைக்கவேண்டும். விதைக்கும் முன் விதைநேர்த்தி, நுண்ணுயிர் நேர்த்தி செய்ய வேண்டும். இதற்கு அளிக்கும் கவனம் நல்ல பலன் தரும்.

**விதை நேர்த்தி:** 8 கிலோ விதையுடன் 32 கிராம் திரம் அல்லது டைத்தேன் எம். 45 மருந்து கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின்னர் நுண்ணுயிர் நேர்த்தி செய்ய வேண்டும்.

**நுண்ணுயிர் நேர்த்தி:** பயறு விதைகளுக்கு நுண்ணுயிரை விதையுடன் நேர்த்தி செய்ய வேளாண் துறை பரிந்துரைக்கிறது. விதைநேர்த்தி செய்த விதையை ஒரு பாக்கெட் நுண்ணுயிர்க் கலவையுடன் கலந்து நேர்த்தி செய்ய வேண்டும். இதற்கு முதலில் நுண்ணுயிர்க் கலவையை அரிசிக் கஞ்சியில் கலந்து நன்கு பரப்பிய விதையில் கரைசலைத் தெளிக்க வேண்டும். பின்னர், விதையை நிழலில் 15 நிமிடம் உலரவைத்த பிறகு விதைக்க வேண்டும்.

**இலைமூலம் உரமிடல்** : பாசிப்பயறுக்கு டிஏபி உரக்கரைசலை இலைமேல் தெளிக்கும்போது சுமார் 50 கிலோ கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. ரைசலை கவனமாக தயாரிக்க வேண்டும். ஏக்கருக்கு தேவையான டை அம்மோனியம் பாஸ்பேட் 4.5 கிலோவை 25 லிட்டர் நீரில் கலந்து ஒருநாள் வைத்திருந்து , தெளிந்த கரைசலை எடுத்து 210 லிட்டர் நீரில் கலந்து முதல் தடவையாக பூக்கும் போதும் , பின்னர் 15 நாளில் அதாவது , 2ஆவது முறையும் கைத்தெளிப்பானால் தெளித்தல் வேண்டும். விதைத் தெளிப்பானைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். மருந்து தெளிக்கும்போது பூக்கள் கீழே விழும் அபாயம் உள்ளது.

**களையெடுத்தல்**: பாசிப்பயறுக்கு களையெடுத்தால் நல்ல பயன் கிடைக்கும். களையெடுத்த வயல்களில் காய்கள் கொத்துக் கொத்தாக பிடித்திருக்கும். விதைத்த 20 ஆம் நாளிலும் , 30ஆம் நாளிலும் களையெடுத்தால் அதிக மகசூல் கிடைக்கும்.

**நீர்ப்பாசனம்**: கோடையில் பாசிப்பயறுக்கு 6 அல்லது 9 பாசனங்கள் தேவை. விதைத்த 3ஆம் நாள் ஒருமுறையும் பிறகு மண் தன்மைக்கு ஏற்ப 10 முதல் 15 நாளுக்கு ஒருமுறையும் பாசனம் கொடுக்கலாம். அதிக அளவில் பாசனம் கொடுத்தால் காய் பிடிப்பது பாதிக்கும். அதிக பாசனம் கொடுத்தால் இலைகள் அதிகம் வளர்ந்து வெயிலில் செடிகள் துவண்டு விடும். இதனால் பூப்பிடிப்பது பாதிக்கும். ஆகவே , பாசனத்தைக் கவனித்து மேற்கொள்வதால் , காய் பிடிப்பது சீராக இருக்கும்.

**பயிர்ப் பாதுகாப்பு** : பூச்சி, நோய்கள் தாக்காமலிருக்க விதைத்த 25 ஆம் நாள் , 130 மில்லி டைமக்ரான் , 500 கிராம் டைத்தேன் எம் 45 ஆகியவற்றை நீரில் கலந்து பயிருக்குத் தெளிக்க வேண்டும். தேமல் நோய் வராமல் தடுக்க எச்சரிக்கை அவசியம். நோய் தாக்கிய செடிகளை உடனுக்குடன் பிடுங்கி பிளாஸ்டிக் பையில் போட்டு தனியே எடுத்துச் சென்று எரிக்க வேண்டும். நோய் தாக்கிய செடிகளைத் தொட்டுவிட்டு நோய் தாக்காத செடிகளைத் தொடக்கூடாது.

**அறுவடை:** பாசிப்பயறில் 3 முதல் 4 அறுவடை கிடைக்கும். விதைத்த 56, 64, 85ஆவது நாள்களில் அறுவடை கிடைக்கும். நல்ல சாகுபடி முறையெனில் 4ஆவது அறுவடை கிடைக்கவும் வாய்ப்புள்ளது. பொதுவாக , 500 கிலோ மகசூல் எடுக்க முடியும். கட்டுக்கோப்பு சாகுபடி முறையைக் கையாண்டால் 600 கிலோ மகசூல் உறுதி.

## வளிமண்டல மேலடுக்கு சுழற்சி: இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுவையில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியது: ஆந்திர கடற்கரை மற்றும் அதை ஒட்டியுள்ள மேற்கு மத்திய வங்கக் கடலில் உருவாகியுள்ள வளி மண்டல மேலடுக்குச் சுழற்சி மற்றும் வெப்பச் சலனம் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் , தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றனர்.

பாளையங்கோட்டையில் சதம்: கடந்த சில வாரங்களாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் வெயிலின் தாக்கம் குறைந்து இதமான வானிலை நிலவி வந்தது. ஆனால் , வியாழக்கிழமை பாளையங்கோட்டையில் 101

டிகிரி வெயில் பதிவானது. மழை அளவு: புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக வேலூர் மாவட்டம் மேலாலத்தூர், வாலாஜாவில் தலா 30 மி.மீ., குடியாத்தம், தஞ்சை மாவட்டம் பேராவூரணி, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் தலா 20 மி.மீ., மழை பதிவானது. சின்னக்கல்லாறு, புதுச்சேரி, தேவாலா, கடலூர், வால்பாறை, ஆர்.கே.பேட்டை, அரக்கோணம் உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

## பால் கொள்முதல்: ஆவின் சாதனை



பால் கொள்முதலில் ஆவின் நிறுவனம் சாதனை படைத்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாநில அரசு புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிவிப்பில், 'தற்போது அதிகபட்சமாக 31.84 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து ஆவின் சாதனை படைத்துள்ளது.

கடந்த ஆண்டில் அதிகபட்சமாக எட்டியிருந்த பால் கொள்முதல் சாதனையான 31.7 லட்சம் லிட்டர் அளவு இப்போது முறியடிக்கப்பட்டுள்ளது' என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 53.69 அடி



மேட்டூர் அணையின் நீர்மட்டம் 53.69 அடியாக உயர்ந்தது. காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழையின் அளவு வெகுவாகக் குறைந்ததால் , மேட்டூர் அணைக்கு நீர்வரத்து புதன்கிழமை காலை நொடிக்கு 4,309 கன அடியாகச் சரிந்தது. இருப்பினும் , அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1,300 கன அடி மட்டுமே தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் 53.69 அடியாக உயர்ந்தது. அணையின் நீர் இருப்பு 20.21 டி.எம்.சி.யாக இருந்தது.

**தினகரன்**

## தமிழகத்தில் வறட்சியால் பருத்தி உற்பத்தி பாதிப்பு



கோவை நாட்டில் கடந்த :2016 ம் ஆண்டு அக்டோபர் முதல் 2017 செப்டம்பர் வரையிலான பருத்தி சீசனில், பருத்தி சாகுபடி குறைந்துள்ளது கடும் வறட்சி . காரணமாக தமிழகத்தில்பருத்தி உற்பத்தி மற்றும் மகசூல் வெகுவாக குறைந்துள்ளது என மத்திய பருத்தி ஆலோசனை குழுவின் ஆய்வில் தெரியவந்துள்ளது.
நாட்டில் பருத்தி சீசன் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் செப்டம்பர் வரை ஆகும் . ) அதன்படி நடப்பு பருத்தி சீசனில்201617) நாட்டில் நிலவிய பருத்தி சாகுபடி பரப்பு, உற்பத்தி குறித்த ஆய்வு பட்டியலை மத்திய பருத்தி ஆலோசனை குழு கடந்த 18ம் தேதி வெளியிட்டுள்ளதுஅதன்படி ., நாட்டில் வட, மத்திய, தென் மற்றும் கிழக்கு மாநிலங்களில் ஒட்டு மொத்தமாக கடந்த 2016 அக்டோபர் முதல் வரும் செப்டம்பர் வரை 108.45 லட்சம் ஹெக்டேர் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இதில் 345 லட்சம் பேல் உற்பத்தியாகியுள்ளது சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு .540 கிலோ மகசூல் கிடைத்துள்ளது கடந்த ஆண்டு பருத்தி சீசன் .2015 அக்டோபர் முதல் 2016 செப்டம்பர் வரை ஒப்பிடுகையில் நடப்பாண்டில் சாகுபடி பரப்பு 14.47 லட்சம் ஹெக்டேர் குறைந்துள்ளது ஆனால் உற்பத்தி .13 லட்சம் பேல் அதிகரித்துள்ளது . மகசூல் ஒரு ஹெக்டேருக்கு81 கிலோ அதிகரித்துள்ளது இதில் தமிழகத்தின் .

நிலவரமாக நடப்பு சீசனில்1.42 லட்சம் ஹெக்டேர் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது . இதில்5 லட்சம் பேல் பருத்தி உற்பத்தியாகியுள்ளது.

மகசூல் சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 599 கிலோ கிடைத்துள்ளது கடந்த .201516ம் ஆண்டு சீசனோடு ஒப்பிடுகையில், நடப்பாண்டில் பருத்தி பரப்பு அதே நிலையில் உள்ளதுஆனால் ., உற்பத்தி ஒரு லட்சம் பேல் குறைந்துள்ளது மகசூல் ஒரு . ஹெக்டேருக்கு120 கிலோ குறைந்துள்ளது இதுகுறித்து தென்னிந்திய மில்கள் சங்கம் . ) நாட்டில் நடப்பாண்டு :செயலாளர் செல்வராஜ் கூறியதாவது (சைமா)201617) சீசனில் சாகுபடி பரப்பு குறைந்ததற்கு காரணம், கடந்த 201516ம் ஆண்டு சீசனில் நிலவிய விலை சரிவால் விவசாயிகள் பயிரிடுவதை குறைத்துவிட்டனர்தமிழ .கத்தில் சாகுபடி பரப்பு அதே நிலையில் இருந்தாலும், நடப்பாண்டில் உற்பத்தி மற்றும் மகசூல் குறைந்ததற்கு காரணம், பருத்தி சீசன் முழுவதும் நிலவிய வறட்சி, போதிய தண்ணீரின்மை முக்கிய காரணமாகும் இவ்வாறு சைமா செயலாளர் செல்வராஜ் . .கூறினார்

## முல்லைப் பெரியாறு அணை பகுதியில் வறட்சி :15 ஆயிரம் ஏக்கர் நெல் சாகுபடி பாதிப்பு




கம்பம்; முல்லைப் பெரியாறு அணையின் நீர்பிடிப்பு பகுதியில் போதிய மழை பெய்யாததால் கம்பம் பள்ளத்தாக்கில் 15,000 ஏக்கர் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதுமுல்லைப் பெரியாறு அணையை நம்பி தேனி ., திண்டுக்கல் உள்ளிட்ட 5 மாவட்டங்களை சேர்ந்த லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள்

பயனடைந்து வருகிறார்கள் போதிய மழை பெய்யாததால் இரண்டு போக சாகுபடி . .இதனால் விவசாயிகளுக்கு சுமார் ரூ .பாதிக்கப்பட்டுள்ளது100 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதுவறட்சி நீங்கி மழை பெய்ய வேண்ட .ி தேக்கடி தலைமதகு பகுதியில் விவசாயிகள் சர்வ மத பிரார்த்தனை நடத்தினர்.

152 அடி கொள்ளளவு கொண்ட முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி நீர் தேக்கப்படுகிறது இதன் நீர்மட்டம் தற்போது .115 அடியாக உள்ளது தேனி மாவட்ட . மக்களின் குடிநீர் தேவைக்காக225 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது அணைக்கு . வினாடிக்கு1700 கனஅடி நீர் மட்டுமே வரத்து உள்ளது இதனால் அணையிலிருந்து . விவசாயத்திற்காக நீர் திறக்கப்பட்டால், நீர் மட்டம் மேலும் சரிந்து விடும் சூழல் உள்ளது.

## தொடர் மழையால் நீர் நிலைகளில் தண்ணீர் மட்டம் அதிகரிப்பு : விவசாயிகள் மகிழ்ச்சி

தேனி தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நீர்நிலைகளில் தண்ணீர் தேங்கும் : அளவிற்கு மழை பெய்துள்ளதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி நீலகிரி மாவட்டம் கூடலூரில் கடந்த சில தினங்களாக பெய்து .தெரிவித்துள்ளனர் வரும் கனமழை காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்குஏற்பட்டுள்ளது இதனால் . பந்தலூர் .பவானி சாகர் அணைக்கு வரும் ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது, தேவசோலை உள்ளிட்ட இடங்களில் பலத்த மழை பெய்வதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் கூடலூரில் .10 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

## மேட்டூர் நீர்மட்டம் 54 அடியை நெருங்கியது



மேட்டூர் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பரவலாக பெய்த மழையால் :, கர்நாடக அணைகளின் நீர்மட்டம் உயர்ந்த வண்ணம் உள்ளதுஇதையடுத்து ., அங்கிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதுஇதனால் ., மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டம் 54 அடியை நெருங்கியுள்ளது.

இந்நிலையில், மழையின் அளவு குறைந்துள்ளதால், நேற்று முன்தினம் விநாடிக்கு 4,899 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 4,309 கனஅடியாக சரிந்தது அணையில் . இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு700 கனஅடி, கிழக்கு, மேற்கு கால்வாயில் 600 கனஅடி என மொத்தம் 1,300 கனஅடி வீதம் தண்ணீர்  திறக்கப்பட்டுள்ளது.